இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
செவ்வாய்க்கிழமை 15-07-2025

# மக்களாட்சிக்கு வைக்கும் வேட்டு!

**தே**ர்தல் ஆணையம், சந்தேகங்களுக்கு அப்பாற்பட்டதாக இருக்க வேண்டும். பொதுவானதாக, நடுநிலை தவறாததாக, நீதியின் அடையாளமாக இருக்க வேண்டும். ஆனால் பா.ஜ.க. ஆட்சிக்கு வந்த பிறகு இதுவும் பா.ஜ.க.வின் கிளை அமைப்புகளைப் போல ஆகிவிட்டது. இதனை காங்கிரஸ் தலைவர் ராகுல் காந்தி, பகிரங்க குற்றச்சாட்டாக வைத்திருக்கிறார்.

“இந்தியத் தேர்தல் ஆணையம் தனது கடமையைச் செய்யாமல், பா.ஜ.க.வின் நலன்களுக்காக மட்டுமே பாடுபடுகிறது” என்று குற்றம் சாட்டி இருக்கிறார் ராகுல் காந்தி. **“மகாராஷ்டிரா மாநிலத்தில் வாக்காளர் பட்டியலில் நடந்த முறைகேடுகளே, அந்த மாநிலச் சட்டமன்றத் தேர்தலில் பா.ஜ.க.வுக்கு வெற்றியைப் பெற்றுத் தந்தது. இத்தேர்தலுக்கு முன் வாக்காளர் பட்டியலில் ஒரு கோடி பேர் சேர்க்கப்பட்டது எப்படி என்ற கேள்விக்கு இது வரை தேர்தல் ஆணையம் பதில் அளிக்கவில்லை. மகாராஷ்டிரா மாநில பாணியில், பீகார் சட்டமன்றத் தேர்தலிலும் முறைகேட்டில் ஈடுபட சதி செய்கிறது பா.ஜ.க. அத்தகைய தேர்தல் திருட்டு முயற்சிகளை முறியடிக்க ‘இந்தியா கூட்டணி’ தீர்மானித்துள்ளது”** என்று ராகுல் காந்தி சொல்லி இருக்கிறார்.

பீகாரில் ‘சார்’ எனப்படும் வாக்காளர் பட்டியல் சிறப்புத் திருத்த நடவடிக்கையை (special intensive revision -SIR) பீகார் அரசு எடுத்து வருகிறது. வீடு, வீடாகச் சென்று வாக்காளர் பட்டியலை சரிபார்த்து வருகின்றனர். அப்போது வாக்காளர்களுக்கு படிவங்கள் கொடுக்கப்படுகின்றன. அவற்றை வாக்காளர்கள் பூர்த்தி செய்து கொடுக்க வேண்டும்.

2003-ஆம் ஆண்டுக்குப் பிறகு வாக்காளர் பட்டியலில் சேர்ந்தவர்கள் இந்திய குடிமகன் என்பதற்கான பிறப்புச் சான்றிதழ் அல்லது பாஸ்போர்ட் உள்ளிட்ட 11 ஆவணங்களில் ஏதாவது ஒன்றை சமர்ப்பிக்க வேண்டும். இந்த ஆவணங்கள் இல்லை என்றால், அவர்களது பெற்றோர்களின் குடியிருப்பு ஆவணங்கள் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படும். இதனையும் வழங்காவிட்டால் வாக்காளர் பெயரை நீக்குவது குறித்து அந்தப்பகுதி வாக்குச்சாவடி அலுவலர் முடிவு செய்வார். 2003 ஆம் ஆண்டு வரை வாக்காளர் பட்டியலில் பெயர் இல்லாத சுமார் 2.93 கோடி வாக்காளர்கள், வாக்களிக்கத் தகுதியானவர்கள் என்பதை நிரூபிக்க, குறிப்பிடப்பட்டுள்ள 11 ஆவணங்களில் குறைந்தது ஒன்றையாவது தர வேண்டும். ஆதார் அட்டை, வாக்காளர் அடையாள அட்டை ஆகிய வற்றை ஆதாரமாகத் தர முடியாது என்றும் சொல்லி விட்டார்கள். இதுதான் சதியின் உச்சம் ஆகும்.

அனைத்து எதிர்க்கட்சிகளும் இதற்கு எதிர்ப்பு தெரிவித்தார்கள். ‘இந்தியா’ கூட்டணிக் கட்சிகள் சார்பில் பீகாரில் ஜூலை 9 ஆம் தேதி முழு அடைப்பு போராட்டம் நடத்தப்பட்டு இருக்கிறது. தேர்தல் ஆணையத்தின் இந்த முடிவுக்கு எதிராக உச்சநீதிமன்றத்தில் பல்வேறு தரப்பினர் வழக்கு தாக்கல் செய்தனர். நீதிபதிகள் சுதான்சு துலியா, ஜோய் மல்யா பாக்சி ஆகியோர் அடங்கிய அமர்வு கடந்த 10 ஆம் தேதி இதனை விசாரித்தது.

பீகாரில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தத்தின் போது வாக்காளர்களின் குடியுரிமை ஆவணமாக ஆதார் அட்டை, குடும்ப அட்டை, வாக்காளர் அட்டை ஆகியவற்றையும் ஏற்க வேண்டும் என்று உச்சநீதிமன்றம் உறுதியாக கட்டளையிட்டுள்ளது. தேர்தல் ஆணையத்தின் விரிவான பதிலைத் தாக்கல் செய்யவும் உச்சநீதிமன்ற நீதிபதிகள் கட்டளையிட்டுள்ளார்கள். இது தேர்தல் ஆணையத்தின் சதிச் செயல்களுக்கு ‘செக்’ வைப்பதாக அமைந்துள்ளது.

**“வாக்காளர் பட்டியலை தீவிரத் திருத்தம் செய்யும் அதிகாரம் தேர்தல் ஆணையத்துக்கு உள்ளதா? இந்தப் பணியை முன்கூட்டியே செய்யாமல் தாமதமாக, தேர்தல் வரவுள்ள நிலையில் மேற்கொள்வது ஏன்? குடியுரிமை தொடர்பான விவகாரம், உள்துறை அமைச்சகத்தின் கீழ் வரும் நிலையில், இதில் தேர்தல் ஆணையம் ஏன் தலையிடுகிறது?”** என்பது போன்ற கேள்விகளை உச்சநீதிமன்ற நீதிபதிகள் எழுப்பினார்கள்.

“குடிமக்களுக்கான அடையாள ஆவணமாக ஆதார் அட்டையை ஏற்க முடியாது” என்று இந்திய தேர்தல் ஆணையத்தின் வழக்கறிஞர் திரிவேதி சொல்லி இருக்கிறார். இதனை ஏற்க உச்சநீதிமன்ற நீதிபதிகள் மறுத்து விட்டார்கள். ஆதார் அட்டையை அடையாள ஆவணமாக ஏற்கத் தான் வேண்டும் என்று கட்டளையிட்டார்கள் நீதிபதிகள்.

இந்திய அரசாங்கம் தரும் ‘ஆதார்’ என்ற அடையாள அட்டையையே செல்லாது என்று தேர்தல் ஆணையம் சொல்கிறது என்றால் எந்தளவுக்கு இதற்குள் சதியாட்டம் நடக்கிறது என்பதை புரிந்து கொள்ள வேண்டும்.

வாக்காளர் சரிபார்ப்பை, ‘இந்தியக் குடிமகனா?’ என்ற சரிபார்ப்பாக மாற்றிவிட்டது தேர்தல் ஆணையம். அப்படி மாற்றிவிட்டது ஒன்றிய பா.ஜ.க. அரசு. குடியுரிமைச் சட்டத்தையே வேறுபாணியில் கொண்டு வருகிறார்கள். அதுதான் உண்மை. பிறப்புச் சான்றிதழைக் கேட்பதன் மூலமாக குறிப்பிட்ட பிரிவினரை வாக்காளர் பட்டியலில் இருந்து நீக்குவதற்கான சதியையே சட்டபூர்வமாக, வெளிப்படையாகச் செய்ய நினைக்கிறார்கள்.

பீகார் மாநிலத்தின் பிரச்சினையே இன்னும் முடிவடையாத நிலையில் நாடு முழுவதும் வாக்காளர் பட்டியல் திருத்தும் பணியை இந்தியத் தேர்தல் ஆணையம் தொடங்க இருக்கிறது. **“வாக்காளர் பட்டியல் சிறப்புத் திருத்தம் என்ற பெயரால் புறவாசல் வழியாக நாடு முழுவதும் தேசிய குடிமக்கள் பதிவேட்டை தயாரிக்கும் பணியை தேர்தல் ஆணையம் மேற்கொள்கிறது”** என்று எதிர்க்கட்சிகள் குற்றம்சாட்டி இருக்கிறது. பா.ஜ.க.வால் நேரடியாகச் செய்ய முடியாததை, தேர்தல் ஆணையத்தின் மூலமாக மறைமுகமாகச் செய்ய நினைக்கிறார்கள்.

பீகார் மாநிலப் பிரச்சினையே இன்னும் தீர்க்கப்படவில்லை. உச்சநீதி மன்றம் எழுப்பிய கேள்விகளுக்கு இந்தியத் தேர்தல் ஆணையம் இன்னும் பதில் அளிக்கவில்லை. இது தொடர்பான வழக்கு ஜூலை 28 ஆம் தேதி உச்சநீதிமன்றத்தில் விசாரணைக்கு வர இருக்கிறது.

**இந்த நிலையில் தேர்தல் ஆணையத்தை தனது எதேச்சதிகார எண்ணத்துக்கு பா.ஜ.க. இழுத்துச் செல்வது இந்திய மக்களாட்சிக்கு வேட்டு வைக்கும் செயல் ஆகும்.**

●●



கழகத் தலைவர் – தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (14.7.2025) சென்னை, அண்ணா அறிவாலயத்தில், “உடன்பிறப்பே வா” என்ற தலைப்பில் சட்டமன்றத் தொகுதி வாரியாக கழக நிர்வாகிகளைச் சந்திக்கும் நிகழ்வில், கோபிசெட்டிபாளையம், பெருந்துறை, குன்னூர் ஆகிய சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட கழக நிர்வாகிகளை தனித்தனியாக சந்தித்துப் பேசினார். அப்போது கழக நிர்வாகிகளுக்கு புத்தகத்தையும் வழங்கினார்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (14.7.2025) சென்னையில் நடைபெற்ற முன்னாள் நீதியரசர் எம்.சத்தியநாராயணன் அவர்களின் மகன் அரவிந்த் சண்முகநாதன் – கிரிஸ்டீன் மரியா கென்காட் ஆகியோரது திருமண விழாவில் கலந்துகொண்டு, மரக்கன்று பசுமைக்கூடை வழங்கி மணமக்களை வாழ்த்தினார்.

# சிவகங்கை மாவட்டத்தில் இன்று ‘உங்களுடன் ஸ்டாலின்’ சிறப்பு திட்டம் துவக்கம்!

## அமைச்சர் கே.ஆர். பெரியகருப்பன் பங்கேற்பு!

*சிவகங்கை, ஜூலை 15 -*

சிவகங்கை மாவட்டத்தில் உங்களுடன் ஸ்டாலின் சிறப்பு திட்டம் இன்று (15ம் தேதி) முதல் செப்டம்பர் மாதம் வரை நடைபெற உள்ளது.

இதுகுறித்து சிவகங்கை மாவட்ட ஆட்சியர் திருமதி க.பொற்கொடி செய்தியாளர்களிடம் கூறியதாவது:-

தமிழக முதல்வர் அறிவித்துள்ள ‘உங்களுடன் ஸ்டாலின்’ சிறப்பு திட்டம் முகாம்கள் சிவகங்கை மாவட்டத்தில் இன்று (15ம் தேதி) முதல் துவங்குகிறது .

மாவட்டத்தில் உள்ள நான்கு சட்டமன்றத் தொகுதியில் 215 முகாம்கள் நடைபெற உள்ளது.

இந்த முகாம்கள் வருகிற செப்டம்பர் மாதம் 2025ம் தேதி வரை நடைபெறும். ஒவ்வொரு வாரமும் வாரத்தில் நான்கு தினங்கள் இந்த முகாம் நடைபெற உள்ளது.

இதில் காரைக்குடி மாநகராட்சியில் 27 முகாம்களும், சிவகங்கை, தேவகோட்டை, மானாமதுரை, நகராட்சியில் 31 முகாம்களும், 11 பேரூராட்சிகளில் 22 முகாம்களும், 129 முகாம்களும், மூன்று புறநகர் ஊராட்சியில் 6 முகாம்களும் ஆக மொத்தம் 215 முகாம்கள் நடைபெற உள்ளது.

இதற்கான துண்டுப் பிரசுரங்கள் இம்மாதம் 7ம் தேதி முதல் தன்னார்வ பணியாளர்களால் வீடு வீடாகச் சென்று விநியோகிக்கப்பட்டு வருகின்றது.

இந்த முகாம்களில் நகர்ப்புறங்களில் 13 அரசு துறைகளின் மூலம் 43 சேவைகள் மக்களுக்கு வழங்கப்பட உள்ளது.

கிராமப்புறங்களில் 15 துறைகளின் சார்பில் 46 சேவைகள் வழங்கப்படுகிறது. மனுதாரர்கள் தங்களது கோரிக்கையினை மனுவின்மூலம் பூர்த்தி செய்து கொடுத்தால் 45 நாட்களுக்குள் தீர்வு காணப்படும்.

எனவே பொதுமக்கள் இந்த சிறப்பு திட்டத்தினை பயன்படுத்தி பயன்பெறுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

இன்று (15 ஆம் தேதி) சிவகங்கை மாவட்டம் எஸ்.புதூர் ஒன்றியம் வாரப்பூர் ஊராட்சியில் கூட்டுறவுத் துறை அமைச்சர் கே.ஆர். பெரியகருப்பன் ‘உங்களுடன் ஸ்டாலின்’ சிறப்பு திட்ட முகாமினை துவக்கி வைக்கிறார். இத்தகவலை மாவட்ட ஆட்சியர் திருமதி க. பொற்கொடி தெரிவித்தார்.

